தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### காவிரி டெல்டா பாசனத்துக்கு மேட்டூர் அணை திறப்பு: விநாடிக்கு 12,000 கனஅடி நீர் வெளியேற்றம்



காவிரி டெல்டா பாசனத்துக்காக மேட்டூர் அணையில் இருந்து முதல் கட்டமாக விநாடிக்கு 12,000 கன அடி வீதம் தண்ணீர் செவ்வாய்க்கிழமை திறந்துவிடப்பட்டது.

உச்ச நீதிமன்றம் உத்தரவிட்ட நிலையில் கர்நாடக அணைகளில் இருந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டதால் மேட்டூர் அணை மெதுவாக நிரம்பி வருகிறது.

இந்த நிலையில், முதல்வர் ஜெயலலிதாவின் உத்தரவின்படி, மேட்டூர் அணை 83-ஆவது ஆண்டாக செவ்வாய்க்கிழமை காலை திறந்துவிடப்பட்டது.

அணையின் வலது கரையில் செவ்வாய்க்கிழமை காலை நடைபெற்ற நிகழ்ச்சியில் பொதுப்பணிகள், நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எடப்பாடி கே.பழனிசாமி, மின்துறை

அமைச்சர் பி.தங்கமணி, சமூக நலத்துறை அமைச்சர் வி.சரோஜா சுற்றுச்சூழல் அமைச்சர் கே.சி.கருப்பண்ணன், போக்குவரத்துத் துறை அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் ஆகியோர் 8 கண் மதகுகளை

இயக்கி டெல்டா பாசனத்திற்காக தண்ணீரை திறந்துவிட்டனர். முதல்கட்டமாக விநாடிக்கு 2 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. இதுதொடர்பாக, எடப்பாடி கே.பழனிசாமி கூறியது: முதல் கட்டமாக 2,000 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. தண்ணீர் அளவு படிப்படியாக அதிகரிக்கப்படும். மேட்டூர் அணைப் பாசனம் மூலம்

சேலம், நாமக்கல், ஈரோடு, கரூர், திருச்சி, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், அரியலூர், பெரம்பலூர், புதுக்கோட்டை, கடலூர் உள்ளிட்ட காவிரி டெல்டா மாவட்டங்களில் உள்ள 12 லட்சம் ஏக்கர் பாசனம் பெற ஏதுவாகிறது என்றார். நாளொன்றுக்கு 1 டி.எம்.சி. நீர் திறப்பு: இதுதொடர்பாக பொதுப்பணித்துறையின் மேட்டூர் கோட்ட செயற்பொறியாளர் சுப்பிரமணியன் கூறியது: அணை நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை காலை நிலவரப்படி 87.68 அடியாக உள்ளது. சுமார் 50.03 டி.எம்.சி. அளவுக்கு நீர் இருப்பு உள்ளது. விநாடிக்கு 10,092 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது.

காலை 8 மணிக்கு விநாடிக்கு 2 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. மாலையில் 12,000 கன அடியாக உயர்த்தப்பட்டது. நாளொன்றுக்கு 1 டி.எம்.சி வீதம் சாகுபடிக்கு ஏற்ப தண்ணீர் திறந்துவிடப் படும். தமிழகத்தில் அடுத்து வடகிழக்குப் பருவ மழை தொடங்க உள்ளதால், மழை அளவைப் பொறுத்து தண்ணீர் திறந்துவிடுவது குறைக்கப்படும். நீர் டெல்டா மாவட்டங்களுக்கு மூன்று தினங்களில் சென்றடையும் என்றார்.

70 டி.எம்.சி. வழங்க வேண்டும்: காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பின்படி ஜூன் முதல் செப்டம்பர் வரையிலான காலகட்டத்தில் கர்நாடகம் சுமார் 120.66 டி.எம்.சி. அளவுக்கு தண்ணீரை தமிழகத்திற்கு வழங்கியிருக்க வேண்டும்.

ஆனால், தற்போது வரை 50.35 டி.எம்.சி. அளவுக்கே தண்ணீரை வழங்கியுள்ளது. அதன்படி மீதம் சுமார் 70 டி.எம்.சி. நீரை கர்நாடகம் வழங்க வேண்டும் என பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

மின் உற்பத்தி தொடக்கம்: தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளதால், அணை மின்நிலையம், சுரங்க மின்நிலையம், 5 கதவணை மின் நிலையங்கள் மூலம் மின் உற்பத்தி தொடங்கியது. அதாவது தற்போது 50 சதவீத அளவுக்கே, சுமார் 200 மெகாவாட் அளவுக்கு மின் உற்பத்தி தொடங்கியுள்ளது.

இதில் விநாடிக்கு 24,000 கன அடி நீர் திறக்கும்போது மட்டுமே 430 மெகாவாட் அளவுக்கு மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

## "திருப்பூர் மாவட்டத்தின் உணவு உற்பத்தி இலக்கு 3.2 லட்சம் மெட்ரிக் டன்'



இந்த நிதி ஆண்டு திருப்பூர் மாவட்டத்துடைய உணவு உற்பத்தி இலக்கு 3.2 லட்சம் மெட்ரிக் டன் என மாவட்ட வேளாண் துறை துணை இயக்குநர் எம்.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

தாராபுரம் அருகே வீராட்சிமங்கலம் ஊராட்சிக்கு உள்பட்ட ஆத்துக்கால்புதூரில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ், பயறு வகை சாகுபடி விழிப்புணர்வு முகாம் திங்கள்கிழமை நடைபெற்றது.

இம்முகாமுக்குக் கலைமை வகித்த மாவட்ட வேளாண் துறை துணை இயக்குநர் எம்.தமிழ்ச்செல்வன் பேசியதாவது:

நடப்பு நிதி ஆண்டில் மாநில உணவு உற்பத்தி இலக்கு 161.7 லட்சம் மெட்ரிக் டன் ஆகும். இதில், திருப்பூர் மாவட்டத்துக்கு 3.2 லட்சம் மெட்ரிக் டன் இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், திருப்பூர் மாவட்டத்துக்கு மானியத் தொகையாக ரூ.97.45 லட்சம் ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ், மானியத் தொகையாக ரூ.41 லட்சம் ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

மேலும், தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், ரொட்டாவெட்டர் கருவி, பைப் லைன்கள், டிராக்டர் ஆகியவை மானியக்கில் வழங்கப்படுகிறது. மானியம் தேவைப்படும் விவசாயிகள் வேளாண்மை விரிவாக்க மையத்தில் பராமரிக்கப்படும் முன்னுரிமைப் பகிவேட்டில் கங்களது பெயர், செல்லிடப்பேசி எண்ணைப் பதிவு செய்து பயனடையலாம் என்றார்.

தாராபுரம் வட்டார வேளாண் துறை உதவி இயக்குநர் எஸ்.எம்.ஞானசேகரன், வேளாண்மை அலுவலர் ரா.துர்காதேவி, துணை அலுவலர் சக்திவேல், தொழில்நுட்ப மேலாளர் விஜய் ஆனந்த், உதவி வேளாண்மை அலுவலர் பாலுசாமி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

**காவிரி நீரை எதிர்பார்த்து சாகுபடியை தொடங்கிய காரைக்கால் விவசாயிகள்**



காவிரி நீரை எதிர்நோக்கி, காரைக்காலில் சம்பா சாகுபடி பணிகளை ஆங்காங்கே விவசாயிகள் தொடங்கியுள்ளனர்.

காரைக்கால் கடைமடைப் பகுதிக்கு காவிரி நீர் 6 டி.எம்.சி. தரவேண்டுமென்பது நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பு. இது எந்த காலக்கட்டத்திலும் உரிய அளவில் காரைக்கால் பகுதிக்கு வந்து சேர்ந்ததில்லை. பருவமழைக் காலத்தில் திறந்துவிடப்படும் உபரிநீர் மட்டுமே காரைக்கால் வழியாக கடலில் சென்று கலக்கிறது. இது தவிர, வேளாண் பருவத்தில் தண்ணீர் காரைக்காலுக்கு உரிய அளவில் கிடைப்பதில்லை என்பது விவசாயிகள் கருத்து.

கடந்த 2015ஆம் ஆண்டு காரைக்கால் பகுதி எல்லைக்குள் காவிரி தண்ணீர் ஆகஸ்ட் மாதம் 20-ஆம் தேதி நுழைந்தது. நிகழாண்டு செப்.20-ஆம் தேதி மேட்டூர் அணை திறக்கப்படுகிறது. திறக்கப்படும் தண்ணீரின் அளவு அதிகரித்தால் மட்டுமே காரைக்கால் கடைமடைப் பகுதிக்கு உரிய தண்ணீர் வந்து சேருமென விவசாயிகள் கூறுகின்றனர்.

எனினும், காரைக்கால் மாவட்டத்தில் சம்பா பயிர் செய்வதற்கான ஆயத்தப் பணிகளை விவசாயிகள் செய்துகொண்டிருக்கின்றனர்.

அம்பகரத்தூர், திருநள்ளாறு, பேட்டை, பூமங்களம், நெடுங்காடு, மேலகாசாக்குடி, கோட்டுச்சேரி உள்ளிட்ட விளைநிலப் பகுதிகளில் விவசாயிகள் பரவலாக முன்னேற்பாடுகளை செய்துவருகின்றனர். திருநள்ளாறு அருகே பூமங்களம் கிராமத்தில், திருநள்ளாறு கோயில் தீர்த்தங்களில் இருந்து வெளியேற்றப்பட்ட தண்ணீரை, மோட்டார் பம்பு மூலம் விளைநிலப் பகுதிக்குள் பாய்ச்சி, நாற்றாங்கால் அமைக்கும் பணிகளில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

## திருந்திய நெல் சாகுபடியில் அதிக மகசூல் எடுக்கும் விவசாயிக்கு ரூ. 5 லட்சம் பரிசு: வேளாண் துறை



திருந்திய நெல் சாகுபடி செய்து அதிக மகசூல் எடுக்கும் விவசாயி சிறப்பு விருதாக ரூ. 5 லட்சம் ரொக்கப் பரிசு மற்றும் பதக்கத்தை குடியரசு தினத்தன்று தமிழக முதல்வரிடம் பெறலாம் என பொன்னமராவதி வேளாண்மை உதவி இயக்குநர் சி. ஜெயபாலன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:
திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பத்தை கடைப்பிடித்து மாநிலத்திலேயே அதிக

மகசூல் பெறும் விவசாயிக்கு ஆக்கமும், ஊக்கமும் அளிக்கும் வகையில், சிறப்பு பரிசாக ரூ. 5 லட்சம் ரொக்கம், ரூ. 3,500 மதிப்பிலான பதக்கம் தமிழக முதல்வர் மூலம் ஒவ்வோர் ஆண்டும் குடியரசு தினத்தன்று வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் பங்கேற்று பயன்பெற விரும்பும் விவசாயிகள் அதற்கான வழிமுறைகளை கடைப்பிடித்து திருந்திய நெல்சாகுபடி செய்திருக்க வேண்டும். திருந்திய நெல் சாகுபடி செய்யும் நில உரிமையாளர்கள் மற்றும் குத்தகைதார்கள் இப்போட்டியில் பங்கேற்கலாம். போட்டியில் பங்கேற்க விரும்புவோர் ரூ. 150 பதிவுக்கட்டணமாக செலுத்தவேண்டும். குறைந்தபட்சம் 50 செண்ட் நிலத்தில் அறுவடை செய்யவேண்டும். குறைந்தபட்ச மகசூலாக ஏக்கருக்கு 2500 கிலோ அறுவடை செய்யவேண்டும். போட்டியில் பங்கேற்க பதிவுசெய்த விவசாயிகள் அறுவடை தேதியை 15 நாள்களுக்கு முன்னதாகவே சம்பந்தப்பட்ட வேளாண்மை உதவி இயக்குநருக்கு நேரிலோ, பதிவு அஞ்சலிலோ தெரிவிக்கவேண்டும்.

நிகழாண்டில் தேர்வு செய்யப்படும் விவசாயிகளுக்கு அடுத்துவரும் ஆண்டின் குடியரசு தினவிழாவில் ரூ. 5 லட்சம் பரிசும், பதக்கமும் வழங்கப்படும். எனவே, திருந்திய நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் அனைத்து தொழில்நுட்பங்களையும் கடைப்பிடித்து விருதுபெற்று பயனடைய வேண்டும்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## தஞ்சாவூரில் விவசாயிகள் இனிப்பு வழங்கி மகிழ்ச்சி

தஞ்சாவூர்: சம்பா சாகுபடிக்கு தண்ணீர் திறந்து விட கர்நாடக மாநிலத்திற்கு சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டது. இதனையடுத்து தஞ்சாவூர் பகுதி விவசாயிகள் இனிப்பு வழங்கினர். தொடர்ந்து தமிழ்நாடு காவிரி விவசாய சங்க மாநில தலைவர் புண்ணியமூர்த்தி கூறுகையில் மத்திய அரசு காவிரி மேலாண்மை வாரியத்தை விரைவில் அமைக்க வேண்டும். சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பு தமிழகத்திற்கும்

விவசாயிகளுக்கும் கிடைத்த வெற்றி, காவிரி மேலாண்மை வாரியத்தை அமைக்க மத்திய அரசுக்கு தமிழக அரசு அழுத்தம் கொடுக்க வேண்டும் என கூறினார்.

## குன்னூரில் காளான் தேக்கம்

குன்னூர்: குன்னூரில் இருந்து கர்நாடகாவுக்கு காளான்களை கொண்டு செல்ல முடியாததால்,பல தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நீலகிரியில், குன்னூர், ஊட்டி, கோத்தகிரி உட்பட பல்வேறு பகுதிகளில், 380 இடங்களில், 21 டன் வரை காளான் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. இதனை, திருப்பூர், ஈரோடு, கோவை, பெங்களூரு உள்ளிட்ட பகுதிகளுக்கு, இதனை உற்பத்தியாளர்கள் அனுப்பி வருகின்றனர். இந்த காளான்கள் தினமும் பஸ்கள், லாரிகள் மூலமாக அனுப்பப்பட்டு வருகிறது. இந்நிலையில், கர்நாடக மாநிலத்தில், தற்போது, அசாதாரண சூழ்நிலை நிலவி வருவதால், காளான்கள் கொண்டுசெல்வது பாதிக்கப்பட்டுள்ளது. பல தொழிலாளர்களும் நஷ்டமடைந்து வருகின்றனர்.

நீலகிரி சிறு விவசாய காளான் உற்பத்தியாளர்கள் சங்க செயலாளர் வினோத்குமார் கூறுகையில், “ பொதுவாக தமிழகம், கர்நாடகா, கேரளா உள்ளிட்ட பகுதிகளுக்கு, நாள்தோறும் நீலகிரியில் இருந்து, 21 ஆயிரம் கிலோ காளான் அனுப்பப்பட்டு வருகிறது. இதில், கர்நாடகாவுக்கு மட்டும், 7000 ஆயிரம் கிலோ காளான்கள் கொண்டு செல்லப்பட்ட நிலையில், தற்போது, அவற்றை கூட கொண்டு செல்ல முடிவதில்லை. காளான்களை ஓரிரு நாட்கள் மட்டுமே, வைக்க முடியும் என்பதால், கடந்த, 10 நாட்களில், பல லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது,”
என்றார்.

## தக்காளி விலை உயர்வை எதிர்நோக்கும் விவசாயிகள்

கன்னிவாடி: தக்காளி கிலோ ரூ.18க்கு கொள்முதல் செய்யப்படும் நிலையில், கன்னிவாடி விவசாயிகள் விலை உயர்வை எதிர்நோக்கி காத்திருக்கின்றனர்.

கன்னிவாடி அருகே தெத்துப்பட்டி, பண்ணைப்பட்டி, டி.புதுப்பட்டி, கட்டச்சின்னான்பட்டி, காமாட்சிபுரம் பகுதிகளில், ஒட்டுரக தக்காளி சாகுபடியில் விவசாயிகள் பலர் ஈடுபட்டுள்ளனர். தற்போது கணிசமான அளவில் மகசூல் அதிகரிக்கத்துவங்கியுள்ளது.

இந்நிலையில் 15 கிலோ கொண்ட பெட்டி ரூ.200க்கு கொள்முதல் செய்யப்படுவதால், விவசாயிகள் கவலையில் உள்ளனர்.

விவசாயி முருகன் கூறுகையில், "தக்காளி தரம் பிரிக்கப்பட்டு 15 கிலோ கொண்ட பெட்டிகளாக திண்டுக்கல், ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டுகளுக்கு அனுப்பப்படுகிறது. கிலோ அதிகபட்சமாக ரூ.18க்கு கொள்முதல் செய்யப்படுகிறது. இதனால் செலவினத்தை ஈடு செய்ய முடியவில்லை. புரட்டாசி மாதமாக இருப்பதால், காய்கறிகளின் தேவை அதிகரிக்கும். தக்காளியின் கொள்முதல் விலையும் உயரும் என எதிர்பார்க்கிறோம்," என்றார்.

## கலர் கோழிக்குஞ்சுகள்: அதிகாரிகள் அறிவுரை

தரகம்பட்டி: பொள்ளாச்சி, நாமக்கல் பகுதிகளில் இருந்து கொண்டு வரப்பட்ட கலர் கோழிக்குஞ்சுகள், கரூர் மாவட்டம் முழுவதும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இதுகுறித்து, கலர் கோழிக் குஞ்சுகள் விற்கும் வியாபாரி மருதமுத்து கூறியதாவது: பொள்ளாச்சி, நாமக்கல் உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து கோழிக்குஞ்சுகளை வாங்கி வந்து, கரூர், அரவக்குறிச்சி, கடவூர், தரகம்பட்டி, புலியூர் போன்ற பல்வேறு பகுதிகளில் விற்பனை செய்கிறோம். ஒரு கோழிக் குஞ்சு, பத்து ரூபாய் தான். இவ்வாறு அவர் கூறினார்.

இதுகுறித்து, கால்நடைத்துறை அதிகாரிகள் கூறியதாவது: கலர் கோழிக் குஞ்சுகள், பிராய்லர் கோழிகளாக தான் வளர்கின்றன. கால்நடை பல்கலை மற்றும் ஆராய்ச்சி மையத்தில் நடக்கும் பயிற்சி முகாமில் பங்கேற்று, அங்குள்ள கோழிக்குஞ்சுகளை வாங்கி பராமரிக்க வேண்டும். இவை, குறைந்த விலையாக இருந்தாலும், வீட்டில் வளர்ப்பதற்கு உகந்தது அல்ல. இவ்வாறு அவர்கள் கூறினர்.

## டீலக்ஸ் பொன்னிக்கு அரசு மானியம் ரத்து

திருவாடானை : டீலக்ஸ் பொன்னி சாகுபடிக்கு செய்யும் விவசாயிகளுக்கு அரசு மானியம் வழங்கப்படமாட்டாது என, திருவாடானை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் கெர்சோன்தங்கராஜ் தெரிவித்தார்.

அவர் கூறியதாவது: திருவாடானை வட்டாரத்தில் 26 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்யபடுகிறது.
விவசாயிகள் நலனுக்காக பயிர் உற்பத்தியை அதிகரித்து வருமானத்தை பெருக்கும் வகையில் அரசு மானிய உதவி வழங்கிவருகிறது. டீலக்ஸ் பொன்னி என்று அழைக்கபடும் பி.பி.டி.5204 ரகமானது அறிமுகபடுத்தபட்டு 10 ஆண்டுகளுக்கு மேலானதால் இவற்றை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு மானியம் வழங்கவாய்ப்பில்லை.

இதர என்.எல்.ஆர்.34449, ஏ.டி.டி.(ஆர்) 49 மற்றும் சி.ஓ.(ஆர்) 50 போன்ற நெல் விதைகள் இருப்பு வைக்கபட்டு மானியத்தில் விநியோகம் செய்யப்படுகிறது. இவ் வகையான நெல் ரகங்களை விதைத்து விவசாயிகள் பயனைடயலாம், என்றார்.

## கண்மாய் நீர்வடிப் பகுதிகள் விளைநிலங்களாக மாற்றம்

முதுகுளத்துார் : முதுகுளத்துார் பெரிய கண்மாய் நீர்வடிப் பகுதிகள் ஆக்ரமிக்கப்பட்டு விவசாய நிலங்களாக மாற்றுவதால் பாசனம் அடியோடு முடங்கும் அபாயம் நிலவுகிறது.

முதுகுளத்துார் பெரிய கண்மாய் ஆயிரத்து 300 எக்டேர் பரப்பளவு கொண்டது.

இதில் தேக்கப்படும் தண்ணீர் மூலம் முதுகுளத்துார், மு.துாரி, கடம்பன்குளம், கீழ, மேலச்சாக்குளம் ஆகிய கிராமங்களை சேர்ந்த ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் பாசனவசதி பெறுகிறது.
இந்நிலையில் கண்மாய் நீர்வடிப் பகுதிகள் ஆக்ரமிக்கப்பட்டு விளை நிலங்களாக மாற்றப்பட்டு வருகிறது. ஆக்ரமிப்பு பகுதிகளில் பாகற்காய், வெள்ளரி, கீரை போன்ற காய்கறிகள் நடவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக கண்மாய்க்குள் நின்ற கருவேல மரங்கள் வேருடன் சாய்க்கப்பட்டுள்ளது. இதேநிலை நீடித்தால் அப்பகுதிகளில் உள்ள 1,300 ஏக்கர் விவசாய நிலங்கள் தரிசு நிலங்களாக மாறும் அபாயம் நிலவுகிறது.

ஆக்ரமிப்புகளை அகற்றி கண்மாய் நீர்வடி பகுதிகளை பாதுகாக்க பொதுப்பணித்துறை, வருவாய்த்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என, விவசாயிகள் வலியுறுத்தி உள்ளனர்.

இதுகுறித்து வருவாய்துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், " கண்மாய் நீர்பிடி பகுதிகளில் ஆக்கிரமிப்பு செய்வோர் மீது உரிய நடவடிக்கை எடுக்கபடும். ஆக்கிரமிப்புகள் விரØவில் அகற்றபடும்", என்றார்.

## புதுச்சத்திரம் விவசாயிகளுக்கு பச்சை பயறு சாகுபடி பயிற்சி

புதுச்சத்திரம்: புதுச்சத்திரம் வேளாண்மைத் துறை மற்றும் ஏத்தாப்பூர் மரவள்ளி மற்றும் ஆமணக்கு ஆரய்ச்சி நிலையம் இணைந்து நடத்திய பயறு வகை பயிர்களின் உற்பத்தியை அதிகரித்தல், பச்சை பயறு சாகுபடி குறித்த பயிற்சியில் புதுச்சத்திரம் வட்டாரத்தை சேர்ந்த, 110 விவசாயிகள் கலந்து கொண்டனர். நாமக்கல் மாவட்ட வேளாண் இணை இயக்குநர் லோகநாத பிரகாசம் தலைமை வகித்தார். புதுச்சத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் வரதராஜ், பயறு வகை சாகுபடி குறித்தும், பேராசிரியர் வெங்கடாச்சலம் பயறு வகை பயிர்களின் ரகங்கள் குறித்தும், பேராசிரியர் கீதா பயறு வகைகளின் பயிர் பாதுகாப்பு குறித்தும், உதவி பேராசிரியர் முனைவர் கதிர்வேல் பயறு வகை பயிர்களின் உழவியல் செய்திகள் குறித்தும் விளக்கினர்.

## அதிகரிக்கிறது அங்கக விவசாயம் சான்றளிப்பு பெறுவது கட்டாயம்

சிவகங்கை : இயற்கை முறையில் விளை பொருளை உற்பத்தி செய்யும் அங்கங்க விவசாயம் தமிழகத்தில் அதிகரித்து வருகிறது. அவற்றிற்கு சான்றளிப்பு பெறுவது கட்டாயம் என, வேளாண்மை துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

உலகளவில் அங்கக விளைப்பொருட்களுக்கு தேவை அதிகரித்துள்ளது. தமிழகத்தில் பலர் இயற்கை விவசாயத்திற்கு மாறி வருகின்றனர். அவற்றிற்கு அங்கக சான்று வாங்காததால் விற்பனை செய்வதில் சிக்கல் உள்ளது. தேசிய அங்கக சான்றளிப்பு துறை அங்கக விவசாயம் குறித்து சில விதிமுறைகளை வகுத்துள்ளது. அதன்படி ரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள், மரபணு மாற்றம் மற்றும் ரசாயன நேர்த்தி செய்த விதைகளை பயன்படுத்த கூடாது.

பயிர் சுழற்சி முறையில் பயறு வகை பயிர்களை சாகுபடி செய்ய வேண்டும். மண் அரிப்பு தடுப்பு மற்றும் மண் வளம் காக்க வேண்டும். இயற்கை உரம், உயிர்

பூச்சிக்கொல்லி மருந்துகளை வாங்கும்போது, அதற்கான உறுதிமொழியை நிறுவனங்களிடம் பெற வேண்டும். இடுபொருள், விளைபொருள், ஆண்டு பயிர்த் திட்டம், பராமரிப்பு, பரிசோதனை குறித்த விபரங்களை பராமரிக்க வேண்டும். தொழிற்சாலைக்கு அருகில் நிலங்கள் இருக்க கூடாது.

அங்கக விளைபொருட்களுக்கான சான்று, கோவை விதை மற்றும் அங்கக சான்றளிப்பு இயக்குனர் அலுவலகம் மூலம் அளிக்கப்படுகிறது. ஏற்கனவே இயற்கை முறையில் சாகுபடி செய்தாலும் ஓராண்டிற்கு ஓராண்டிற்கு முன் பதிவு செய்து அங்கக தர விதிமுறையை பின்பற்ற வேண்டும். ஆண்டு பயிராக இருந்தால் 2 ஆண்டு, பல ஆண்டு பலன்தரும், செடி, மரங்களாக இருந்தால் 3 ஆண்டு முன் பதிய வேண்டும்.

வேளாண்மைத்துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது: தனிநபராக, குழுக்களாக அங்கக சான்றுக்கு விண்ணப்பிக்கலாம்.

தமிழகத்தில் இதுவரை 4,399 விவசாயிகள் 29,720 ஏக்கர் நிலங்களை அங்கக சான்றுக்கு பதிவு செய்துள்ளன.

அங்கக விளைப்பொருட்களுக்கு தேவை அதிகரித்துள்ளதால் தமிழக அரசு அங்கக விவசாயத்தை ஊக்குவித்து வருகிறது. இந்த ஆண்டு 31 ஆயிரம் ஏக்கருக்கு இலக்கு நிர்ணயித்துள்ளது. அங்கக சான்று இருந்தால் மட்டுமே வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முடியும், என்றார்.

## பசுமைக்குடில் வெள்ளரி சாகுபடியில் பலமடங்கு லாபம்

வெள்ளரி சாகுபடியில் திறந்த வயல்வெளியில் இரண்டு ஏக்கரில் கிடைக்கும் மகசூலை விட அரை ஏக்கரில் பசுமைக்குடில் அமைத்து மூன்று மடங்கு கூடுதல் மகசூல் ஈட்டலாம் என்கிறார், மதுரை மாவட்டம் திருமங்கலம் அருகே பிள்ளையார்நத்தம் விவசாயி கோவிந்தராஜ்.

விவசாயம் மீதான ஈர்ப்பால் சொந்த ஊரில் வெள்ளரி, பாகற்காய் போன்ற காய்கறி பயிர்களை பயிரிட்டு லாபம் ஈட்டி வருகிறார். தோட்டக்கலை துறை மூலம் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் 50 செண்ட் நிலத்தில் பசுமைக்குடில் அமைத்துள்ளார். இதற்காக அவருக்கு 24 லட்சத்து 68 ஆயிரத்து 250 ரூபாய் செலவானது. மானியமாக 8 லட்சத்து 90 ஆயிரம் ரூபாயை தோட்டக்கலைத்துறை வழங்கியது.கோவிந்தராஜ் கூறியதாவது: மானாவாரி நிலத்தில் விவசாயம் செய்ய

முதலில் தயக்கமாக இருந்தது. இதனால் தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் பூபதி, உதவி இயக்குனர் கலைச்செல்வனுடன் ஆலோசித்து பசுமைக்குடில் அமைத்து வெள்ளரி சாகுபடி பணியில் இறங்கினேன். 50 சென்ட் நிலத்தில் ஐந்து லட்சம் ரூபாயில் பசுமைக்குடில் அமைத்தேன். கடந்த டிசம்பரில் வெள்ளரி விதை வாங்கி நடவு செய்தேன். பின் அதை பாத்தி கட்டி பசுமைக்குடிலில் வளர்த்தேன். 28 நாட்களில் பூக்கத் துவங்கியது. 43 வது நாளிலிருந்து காய்களை பறிக்க துவங்கினோம். இயற்கை உரம் பயன் படுத்தினேன். ஒரு கிலோ 15 முதல் 30 ரூபாய் வரை விலை போகிறது. உற்பத்தி செலவு கிலோவிற்கு 12 ரூபாய் ஆகிறது.'ஆப் சீசன்' காலங்களிலும் அதிகபட்சமாக கிலோ 60 ரூபாய் வரை கிடைக்கும். இதற்கு முன்பு ஒரு சாகுபடி முடித்து உள்ளோம். இதில் எங்களுக்கு 24.7 டன் மகசூல் கிடைத்தது. இது சராசரியாக ஒரு எக்டேர் பரப்பில் கிடைக்க வேண்டியதாகும். திறந்த வயல்வெளியில் கிடைக்கும் மகசூலை காட்டிலும் பசுமைக்குடில் மூலம் நான்கு மடங்கு மகசூல் ஈட்டலாம். பசுமைக்குடிலில் கட்டுப்பாடான சூழல் நிலவுவதால், பயிர் வளர்ப்பில் இடர்பாடுகள் இல்லை. பராமரிப்பு ஆட்கள் செலவும் குறைவு. தற்போது என் தோட்டத்தில் ஏழு பேர் பணிபுரிகின்றனர். ஒட்டன்சத்திரம், மதுரை மார்க்கெட்டிற்கு வெள்ளரி அனுப்பினேன். தற்போது உள்ளூர் தேவைக்கு சரியாக இருக்கிறது. தரம் சீராக கிடைப்பதால் சந்தைப் படுத்துவது எளிதாக இருக்கிறது. முறையாக நடவு செய்து பராமரித்து வளர்த்தால் உற்பத்தி செலவு நீங்கலாக ஆண்டுக்கு நான்கு லட்சம் ரூபாய் வரை லாபம் ஈட்ட முடியும். நான் சென்னையில் பணிபுரிந்தாலும் வாட்ஸ்ஆப் மூலம் தோட்ட பணியாளர்களை தொடர்பு கொண்டு விவசாயம் செய்கிறேன், என்றார். **தொடர்புக்கு: 96771 24505.**

- எம்.ரமேஷ்பாபு, மதுரை.

## நாட்டுக்கோழிகள்! நடமாடும் வங்கிகள்!

தொழில் ரீதியாக கூண்டு முறையில் கோழிகள் வளர்க்கப்படுகின்றன. பண்ணையில் வளர்க்கப்படும் கோழிகளுக்கு நோய்த்தடுப்பு கண்காணிப்பு முறை தவறாமல் கடைப்பிடிக்கப்படுகிறது. கிராமங்களில் சாதாரண பெண்கள் கோழி வளர்ப்பில் முறையான நோய் தடுப்பு முறைகளை கையாள வேண்டும். இதனால் கோழிகள் இறப்பு குறைவதுடன் பொருளாதார நஷ்டமும் தவிர்க்கப்படும். நாட்டுக்கோழிகளை சமைப்பதால் ஏற்படும் மணமும், ருசியும் இறைச்சி சாப்பிடுபவர்களை வெகுவாக கவர்ந்து விடுகின்றன. இதனால் நாட்டுக்கோழிகளை அதிக விலை கொடுத்து வாங்குவதற்கு அசைவ பிரியர்கள்

தயங்குவதில்லை.

**நடமாடும் வங்கிகள்:** நாட்டுக்கோழிக்கு அதிக விலை கிடைக்கும் போது கிராம பெண்கள் நாட்டுக்கோழி வளர்ப்பில் சிறப்பு கவனம் செலுத்தினால், நாட்டுக்கோழிகள் நடமாடும் வங்கிகளாக கை கொடுத்து உதவும். தமிழக அரசு நாட்டுக்கோழி வளர்ப்பவர்களை உற்சாகப்படுத்தும் பொருட்டு 'மாநில கோழி வளர்ப்பு கிட்டம்' என்ற கிட்டக்கினை செயல்படுக்கி வருகிறது. இத்திட்டத்தில் பங்கேற்க விதிமுறைகள் மிகவும் எளிதாக்கப்பட்டுள்ளன.

ஒரு நபர் 250 நாட்டுக்கோழிகளை வளர்க்க அரசு மானியம் வழங்குகிறது. 20 அடிக்கு 16 அடி என்ற அளவில் கோழிக்கொட்டகை அமைக்க வேண்டும். விண்ணப்பத்துடன் ரேஷன் கார்டு நகலினை இணைத்து அருகில் உள்ள கால்நடை உதவி மருத்துவரிடம் கொடுத்தால் அவர் அதனை பரிசீலனை செய்வார். தேர்ந்தெடுக்கப்படும் பயனாளிகளுக்கு கால்நடை பராமரிப்புத் துறை நாட்டுக்கோழி குஞ்சுகளை வாங்குவதற்கும், பின்னர் நோய் தடுப்பு தொடர் நடவடிக்கைகளையும் மேற்கொள்கிறது. இயற்கையிலேயே நாட்டுக்கோழிக் கறியின் சதைப்பகுதியில் உள்ள திசுக்கள் ருசியாக இருக்கும்படி அமைந்துள்ளன. மேலும் கொல்லைப் புறங்களுக்கு சென்று குப்பையை கிளறியும் நிலக்கழிவுகளையும், புற்களுடன் சேர்த்து சாப்பிடுவதால் நாட்டுக்கோழிக்கறியைச் சமைக்கும் போது அதிக வாசனையை பரப்புகிறது. இந்த மணமும் ருசியுமே நாட்டுக்கோழிகள் அதிக விலைக்கு விற்பதற்கு காரணமாகிறது.

சைவ முட்டைகள் சேவல் இல்லாமல் கோழி முட்டை இடுமா? என்ற கேள்வியை கேட்டால் படித்தவர் முதல் பாமரர் வரை இடாது என்றே கூறுவர். கோழிகள் முட்டையிட சேவல்கள் தேவையில்லை. ஆனால் கோழிகள் இடும் முட்டைகள் குஞ்சு பொரிக்க சேவல்கள் அவசியம் தேவை. எனவே தான் பண்ணைகளில் சேவல் இல்லாமல் கோழிகள் இடும் முட்டை குஞ்சு பொரிக்காது. ஆகையால் இவற்றை சைவ முட்டையாகவும் கருதலாம்.

கோழி முட்டையை விதையாகவே கருதுகின்றனர். செடி கொடிகளின் விதைகள் இனச்சேர்க்கையில் உருவானவை. கோழி முட்டையிடுவது இனச்சேர்க்கையாலும் ஏற்படும். இனச்சேர்க்கை இல்லாலும் நிகழும். முட்டை என்பது ஒரு பெண் செல். விலங்கினங்களில் இப்பெண் செல் கண்ணுக்கு தெரியாது. ஆனால் பறவை இனங்களில் கண்ணால் பார்க்க கூடிய அளவுக்கு தெரிகிறது. ஆகவே சேவல் இருந்தாலும், சேவல் இல்லா விட்டாலும் கோழிகள் முட்டையிட்டு கொண்டு தான்

இருக்கும். தொடர்புக்கு 94864 69044. **- டாக்டர் வி.ராஜேந்திரன்,** முன்னாள் இணை இயக்குனர், கால்நடை பராமரிப்புத்துறை, நத்தம்.

**தாய்லாந்து கொய்யா ஏக்கருக்கு 10 டன் மகசூல்**

கொய்யா பழத்தில் வைட்டமின் 'சி' நிறைந்துள்ளது. இதில் நோய் எதிர்ப்பு சக்தி ஆப்பிள் பழத்தை காட்டிலும் மூன்று மடங்கு அதிகம் கொண்டது. எனவே அனைத்து நிலைகளிலும் ஆப்பிள் பழத்திற்கு நிகரான சத்துக்களை கொண்டுள்ளது. எனவே இப்பழம் நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு உண்ண உகந்தபழம்.

தாய்லாந்து ரகம் பல விதங்களில் சிறப்பு வாய்ந்ததாக உள்ளது. இதில் மகசூல் அதிகம். ஆண்டு முழுவதும் பழங்கள் கிடைக்கும். விதை அளவு குறைவு. சதைப்பற்று அதிகம். பழத்தில் அளவும் பெரியது (ஒரு கிலோ வரை இருக்கும்). பேரி மற்றும் ஆப்பிள் போன்று கடித்து சாப்பிட மிருதுவாக சுவையாக இருக்கும். அதிக நாட்கள் அறுவடைக்கு பின் வைத்தும் பயன்படுத்தலாம்.

**நடவு முறை:** 10க்கு 10, 12க்கு 10, 12க்கு 12 மற்றும் 16க்கு 8 ஆகிய இடைவெளிகளில் நடவு செய்யலாம். ஒட்டு கன்றுகளை 2க்கு 2 என்ற அளவுள்ள குழிகளில் நடவு செய்ய வேண்டும். குழிகளில் தொழு உரம் மற்றும் மண் 1:1 என்ற விகிதத்தில் கலந்து நிரப்ப வேண்டும். பின் ஒட்டு நாற்றுகளை நட்டு சிறு மூங்கில் குச்சிகளை அதற்கு ஆதரவாக நட வேண்டும். சொட்டு நீர் பாசன முறையில் குழி ஒன்றுக்கு ஒரு நாளைக்கு 2 - 3 லிட்டர் நீர் விட வேண்டும். ஆறு மாதங்கள் கழித்து நீரின் அளவை அதிகரிக்க வேண்டும். செடி நேராக ஒன்று அல்லது இரண்டு கிளைகள் விட்டு பக்க கிளைகளை ஒடிக்க வேண்டும்.

**உரமிடும் முறை:** ஆண்டுக்கு இருமுறை நன்கு மக்கிய உரம் செடிக்கு 5 கிலோ வீதம் இட வேண்டும். மேலும் மண்புழு உரம் இடுதல் நலம். உர உபயோகத்தை அதிகப்படுத்த ஏக்கருக்கு 5 கிலோ அசோஸ்பைரில்லம் மற்றும் பாஸ்போ பாக்டீரியா போன்ற உயிர் உரங்களை தொழு உரத்துடன் கலந்து இட வேண்டும். மேலும் நோய்களில் இருந்து பாதுகாக்க சூடோமோனாஸ் மற்றும் டிரைக்கோடெர்மா ஆகிய உயிரியல் பாதுகாப்பு மருந்துகளை ஏக்கருக்கு தலா 5 கிலோ வீதம் இட வேண்டும். முதல் இரண்டு ஆண்டுகளுக்கு செடியில் வரும்

பூக்கள் மற்றும் காய்களை அகற்ற வேண்டும். இரண்டு ஆண்டுகளுக்கு பின் காய்க்க அனுமதிக்கலாம்.

**ஏக்கருக்கு 10 டன்:** காய்ப்பு முடிந்தவுடன் கவாத்து செய்தல் அவசியம். ஒவ்வொரு காய்களுக்கும் பாலிதீன் கவர்களை போடுவதன் மூலம் தரமான காய்களை அறுவடை செய்து அதிக விலைக்கு விற்கலாம். பூச்சிகள் தாக்குதலை கட்டுப்படுத்த பஞ்ச காவியம் மற்றும் வேம்பு பூச்சி மருந்துகளை மாதம்தோறும் தெளிக்க வேண்டும். களைகள் இல்லாமல் இருக்க சிறு டிராக்டர் கொண்டு உழ வேண்டும். நூற்புழு தாக்குதல் இருந்தால் மெரிகோல்ட் என்னும் செண்டுமல்லி செடிகளை கொய்யா செடிகளின் அடிப்பகுதியில் வளர்க்க வேண்டும். இரண்டாவது ஆண்டிற்கு பின் ஏக்கருக்கு எட்டு முதல் பத்து டன் மகசூல் எடுக்கலாம். தொடர்புக்கு கொய்யா விவசாயி மனோகரனின் 94425 16641ல் பேசலாம்.

**- டி.யுவராஜ், வேளாண் பொறியாளர்,**உடுமலை.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## வறட்சியில் இருந்து பயிர்களை காக்க தொழில்நுட்ப பயிற்சி

தர்மபுரி: பாப்பாரப்பட்டி வேளாண்மை அறிவியல் நிலையம் சார்பில், வறட்சியில் இருந்து பயிர்களை காக்க வேளாண் விரிவாக்க அலுவலர்களுக்கு தொழில்நுட்ப பயிற்சி முகாம் நடந்தது. முகாமில் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் சண்முகம் வரவேற்றார். வேளாண்மை இணை இயக்குனர் ராஜேந்திரன் தலைமை வகித்து, வறட்சி வேளாண்மை தொழில்நுட்பங்களை சரியான தருணத்தில் பயன்படுத்துவதன் முக்கியத்துவம் பற்றி விளக்கினார். பயிற்சியில் வேளாண்மை துணை இயக்குனர் (மாநில திட்டம்) வெங்கடேசன், துணை இயக்குனர் சுசிலா, துணை இயக்குனர் (அட்மா) பாஸ்கரன் ஆகியோர் வேளாண் விரிவாக்க அலுவலர்களுடன் வறட்சி மேலாண்மை தொழில்நுட்பங்கள் குறித்து கலந்துரையாடினர். மண்ணியல் துறை உதவி பேராசிரியர் சங்கீதா, உள்ளிட்ட பலர் பயிற்சி அளித்தனர். இதில் 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## சிறுதானிய சாகுபடி பயிற்சி

நாமக்கல்: வேளாண் அறிவியல் நிலைய இணை பேராசிரியர் அகிலா வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: நாமக்கல் மோகனூர் சாலையில் உள்ள வேளாண் அறிவியல் நிலையத்தில் 27ம் தேதி காலை 9 மணிக்கு நெல், மக்காச்சோளம், கம்பு, கேழ்வரகு மற்றும் சிறுதானிய பயிர்களில் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை என்ற தலைப்பில் ஒருநாள் இலவச பயிற்சி நடைபெறுகிறது. இப்பயிற்சியில் பல்வேறு விளக்கங்கள் விரிவாக எடுத்துரைக்கப்படுகிறது. மண் மாதிரி எடுக்கும் முறைகள் செயல்விளக்கத்துடன் காண்பிக்கப்படும். மேலும், ஆய்வகத்தில் சோதனைகளும் செய்து காண்பிக்கப்படும். இப்பயிற்சியில் விருப்பமுள்ளவர்கள் தங்களது பெயர்களை 26ம் தேதிக்குள் முன்பதிவு செய்து கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தில் 40 சதவீத மானிய விலையில் தேனீ வளர்ப்பு உபகரணங்கள்

கிருஷ்ணகிரி : விவசாயிகளுக்கு 40 சதவீத மானிய விலையில் தேனீக்கள் வளர்ப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டது. கிருஷ்ணகிரி மாவட்டம் திம்மாபுரம் அரசு பண்ணையில் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பில், தேசிய தோட்டக்கலை வளர்ச்சி இயக்கம் மற்றும் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு 40 சதவீத மானிய விலையில் தேனீக்கள் வளர்ப்புக்கான தேனீப் பெட்டிகள் மற்றும் உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட கலெக்டர் கதிரவன் பங்கேற்று, தேனீக்கள் வளர்ப்பு உபகரணங்களை, விவசாயிகளுக்கு வழங்கி பேசுகையில், நடப்பாண்டில் தேசிய தோட்டக்கலை வளர்ச்சி இயக்கம் 50 விவசாயிகளுக்கு தலா ரூ.24 ஆயிரம் வீதம் 500 தேனீ வளர்ப்பு பெட்டிகள் மானியத்தில் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் மொத்த மானியம் ரூ.12 லட்சம் ஆகும். அதே போல் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் 10 விவசாயிகளுக்கு 100 பெட்டிகள் ரூ.16 ஆயிரம் மானிய விலையில் ஒவ்வொரு விவசாயிக்கும் வழங்கப்படுகிறது.

அதன்படி அரசு வழங்கக்கூடிய மொத்த மானியம் ரூ.1.60 லட்சம் ஆகும். இதுவரை இம்மாவட்டத்தில் 60 விவசாயிகளுக்கு இந்த திட்டங்களின் கீழ் ரூ.13 லட்சத்து 60 ஆயிரம் மதிப்பில் மானியம் வழங்கப்பட்டுள்ளது. தேன் வளர்ப்பு தொழில் மூலம் தேன் விற்பனைக்கு உட்படுத்துவதோடு, அதனால் இரட்டிப்பு வருமானமும் விவசாயிகளுக்கு கிடைக்கிறது. எனவே, ஆர்வமுள்ள விவசாயிகள் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையினை அணுகி அரசு மானியம் பெற்று தேனீக்கள் வளர்த்து பயன்பெற கேட்டுக்கொள்ளவும். இவ்வாறு அவர் பேசினார். இந்நிகழ்ச்சியில், தோட்டக்கலைத்துறை இணை இயக்குநர் ராஜா முகமது, துணை இயக்குநர் சீனிவாசன், உதவி இயக்குநர்கள், தோட்டக்கலை அலுவலர்கள் மற்றும் விவசாயிகள் கலந்துகொண்டனர்.

## குறைந்த செலவில் மஞ்சள் சாகுபடி

ஈரோடு, : இந்திய தொழிற் கூட்டமைப்பு (சிஐஐ) மற்றும் உழவன் உற்பத்தியாளர் நிறுவனம் சார்பில் குறைந்த செலவில் மஞ்சள் சாகுபடி செய்வதற்கான கருத்தரங்கம் ஈரோடு வாட்டர் ஆபீஸ் ரோட்டில் நடந்தது. சிஐஐ தலைவர் யூஆர்சி தேவராஜன் வரவேற்றார். உழவன் உற்பத்தியாளர் நிறுவன தலைவர் நல்லுசாமி, தமிழக விவசாயிகள் சங்கத் தலைவர் ஈ.ஆர்.குமாரசாமி, சிஐஐ துணைத்தலைவர் சின்னசாமி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

கருத்தரங்கில் உற்பத்தி பொருட்கள் மற்றும் செலவீனங்களை கணக்கீடு செய்து புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்தி குறைந்த செலவில் அதிக மகசூல் பெறும் முறையும், விவசாய பொருட்களை தரம் பிரித்து விற்பனை செய்வதன் முக்கியத்துவம் குறித்தும், இடைத்தரகர்கள் இன்றி விவசாயிகளே நேரடியாக வியாபாரிகளுக்கு விற்பனை செய்யும் வழிமுறைகள் குறித்தும் விளக்கம் அளிக்கப்பட்டது.

## விளைச்சல் குறைவால் தக்காளி விலை உயர்வு

கரூர்: விளைச்சல் குறைவினால் கரூரில் தக்காளி விலை உயர தொடங்கியுள்ளது.கரூர் பகுதிக்கு தக்காளி கிருஷ்ணகிரி, தர்மபுரி மாவட்டங்களில் இருந்து அதிகஅளவில் விற்பனைக்கு வந்தது. மேலும் உள்ளூர் விளைச்சலும் இருந்ததால் தக்காளி விலை வீழ்ச்சியடைந்தது. கடந்த மாதம் ஒரு கிலோ ரூ.10க்கு

விற்பனை செய்யப்பட்டது. உழவர் சந்தைகளில் கிலோ ரூ.6 என விலை வீழ்ச்சியடைந்தது. தற்போது விளைச்சல் குறைவினால் மீண்டும் தக்காளி விலை உயரத் தொடங்கியுள்ளது. கடைகளில் ஒரு கிலோ தக்காளி ரூ.20க்கு விற்பனை செய்யப்படுகிறது. உழவர் சந்தைகளில் கிலோ ரூ.15க்கு விற்பனையாகிறது. விளைச்சல் குறைவு காரணமாக விலை மேலும் உயரலாம் என வியாபாரிகள் தெரிவித்தனர்.

## சம்பா தொகுப்பு திட்டத்தில் விதைப்பு கருவி மூலம் நெல் விவசாயிகளுக்கு ரூ.600 மானியம் வழங்ப்படும் வேளாண் அதிகாரி தகவல்

பட்டுக்கோட்டை: சம்பா தொகுப்பு திட்டத்தின்கீழ் சம்பா பருவத்தில் விதைப்பு மேற்கொள்ளப்படும் வயல்களில் ஏற்படும் துத்தநாகசத்து பற்றாகுறையை போக்க சிங்க் சல்பேட் பயன்படுத்தும் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.200 வீதம் பின்னேற்பு மானியம் வழங்கப்படுகிறது. இதுகுறித்து திருவோணம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மதியரசன் வெளியிட்டுள்ள அறிக்கை: சம்பா தொகுப்பு திட்டத்தின்கீழ் நேரடி நெல் விதைப்பு செய்யப்பட்ட வயல்களில் துத்தநாக சத்து பற்றாக்குறையை போக்க சிங்சல்பேட் நுண்ணூட்ட உரம் பயன்படுத்தும் விவசாயிகளுக்கு அரசு மானியமாக ஏக்கருக்கு ரூ.200 வீதம் பின்னேற்பு மானியமாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

துத்தநாக சத்து பற்றாக்குறையை போக்க ஏக்கருக்கு 10 கிலோ வீதம் சிங் சல்பேட் நுண்ணூட்ட உரம் பயன்படுத்த வேண்டும். நுண்ணூட்ட உரத்தை 25 கிலோ மணலுடன் கலந்து விதைத்த 25 50வது நாளில் தூர் கட்டும் பருவத்தில் நிலத்தில் ஈரம் இருக்கும்போது தூவ வேண்டும். இதனால் பயிர்கள் விரைவாக வேர் வளர்ச்சி பெற்று சத்துக்களை கிரகிப்பதன் மூலம் அதிக மகசூல் கிடைக்க வழி செய்கிறது. தேவையான சிங்க் சல்பேட் நுண்ணூட்ட உரத்தை கூட்டுறவு நிறுவனங்களிலிருந்தோ (அல்லது) தனியார் உரவிற்பனை மையங்களிலிருந்தோ பெற்று அதற்குரிய ரொக்க ரசீதை அந்த பகுதி வேளாண்மை உதவி அலுவலர்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

அலுவலக கூர்ந்தாய்வுக்கு பின்னர் அனுமதிக்கப்படும் அரசு மானியம் விவசாயிகளின் வங்கி கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்படும். இத்திட்ட இனத்தின்கீழ் திருவோணம் வட்டாரத்துக்கு பொருள் இலக்காக 750 ஏக்கரும், நிதி

இலக்காக ரூ.1.50 லட்சமும் ஒதுக்கீடுகள் பெறப்பட்டுள்ளது. எனவே அரசு அறிவித்துள்ள மானிய பயன்களை பெற்று விவசாயிகள் பயன்பெறலாம்.

## திருத்துறைப்பூண்டி ஒன்றியத்தில் கோமாரி நோய் தடுப்பூசி முகாம்

திருத்துறைப்பூண்டி : திருத்துறைப்பூண்டி ஒன்றியத்தில் கடந்த 1ம் தேதி முதல் மன்னார்குடி கோட்ட தமிழ்நாடு அரசு கால்நடை பராமரிப்புதுறை சார்பில் 11வது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடைபெற்று வருகிறது. பனையூர், ஆண்டாங்கரை, கீராலத்தூர், பூசலாங்குடி, கீரக்களூர், கட்டிமேடு, வேளூர் ஆகிய கிராமங்களில் கால்நடை மருத்துவர் ராமலிங்கம் தலைமையில் கால்நடை உதவி மருத்துவர்கள் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி செலுத்தினர். முகாமில் அந்தந்த ஊராட்சி மன்ற தலைவர்கள் கலந்து கொண்டனர்.

## திருவாரூர் மாவட்டத்தில் கால்நடை தீவன உற்பத்திக்கு மானியம் விவசாயிகளுக்கு அழைப்பு

திருவாரூர் : திருவாரூர் மாவட்டத்தில் கால்நடைகளுக்கு உரிய பசுந்தீவனத்தை அரசு மானியத்துடன் கூடிய திட்டத்தில் உற்பத்தி செய்ய விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்போர் விண்ணப்பிக்கலாம் என்று கலெக்டர் தெரிவித்துள்ளார். இதுகுறித்து கலெக்டர் நிர்மல்ராஜ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

கால்நடைகளின் உற்பத்தித்திறனுக்கு தீவனம் மற்றும் பசுந்தீவனம் மிகவும் இன்றியமையாத காரணிகள் ஆகும். பால் உற்பத்தியை பெருக்குவதற்கு, கறவை மாடுகளுக்கு தேவையான அளவு பசுந்தீவனம் வழங்க வேண்டும். கால்நடைகளுக்கான மொத்த உற்பத்தி செலவீனத்தில் 65 முதல் 70 விழுக்காடு, தீவன மற்றும் பசுந்தீவன உற்பத்திக்கு மட்டுமே செலவிடப்படுகிறது. கால்நடைகளுக்கு பசுந்தீவனத்தின் தேவைக்கும், உற்பத்திக்கும் இடையே மிகப்பெரிய இடைவெளி உள்ளதால் அதனை ஈடுசெய்யும் வகையிலும், கால்நடை வளர்ப்போர் அவர்களே பசுந்தீவனத்தை உற்பத்தி செய்வதை ஊக்கப்படுத்தும் வகையிலும் தமிழக அரசு மாநில தீவன அபிவிருத்தி திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

விவசாயிகளின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தும் நோக்குடன் கால்நடை பராமரிப்புத்துறையின் மூலம் நடப்பு நிதியாண்டில் திருவாரூர் மாவட்டத்தில் அரசு மானியத்துடன் கூடிய தீவனப்பயிர் சாகுபடி திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளது. அதன்படி இறவையில் பல்லாண்டு தீவன சோளம் 50 ஏக்கர் பரப்பில் சாகுபடி செய்திட திட்டமிடப்பட்டு பயனாளி ஒருவருக்கு 0.25 ஏக்கர் வீதம் தீவன விதைகள் வழங்குதல், மானாவாரியில் 100 ஏக்கரில் தீவன சோளம் மற்றும் தீவனத் தட்டைப்பயறு சாகுபடி செய்திட பயனாளி ஒருவருக்கு 0.25 ஏக்கருக்கு தீவன விதைகள் வழங்குதல், மர வகை தீவனத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் வெல்வேல், பூவரகு, கிலைரிசிடியா, வாகை, கல்யாண முருங்கை, வேம்பு, கொடுக்காபுலி போன்ற மரக்கன்றுகள் விவசாயிகளுக்கு வழங்கி மரவகை தீவனப்பயிர் உற்பத்தியை பெருக்குவதுடன் கோடை காலம் மற்றும் தீவன பற்றாக்குறை காலங்களில் தீவனம் கிடைக்க செய்தல்.

மேலும் அசோலா திடல் அமைக்க ஒரு பயனாளிக்கு ரூ.2 ஆயிரத்து 550 மானியம் வழங்குதல், தீவனப்பயிர் அதிக அளவில் கிடைக்கும் காலங்களில் அவற்றை சேகரித்து பதப்படுத்தி ஊறுகாய் புல்லாக கால்நடைகளுக்கு வழங்குவதற்கு விவசாயி ஒருவருக்கு 250 கிலோ கொள்ளளவு உடைய 4 சைலேஜ் பைகள் இலவசமாக வழங்குதல் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன. எனவே இந்த திட்டங்களில் கால்நடை வளர்ப்போர் மற்றும் விவசாயிகள் தங்கள் பகுதியில் உள்ள கால்நடை நிலையங்களை நேரில் தொடர்பு கொண்டு பயன்பெறலாம். இவ்வாறு கலெக்டர் தெரிவித்துள்ளார்.

## நாகை வட்டாரத்தில் 15,500 ஏக்கரில் சம்பா சாகுபடி

நாகை : நாகை வட்டாரத்தில் 15,500 ஏக்கரில் சம்பா சாகுபடி மேற்கொள்ளப்பட இருப்பதாக சென்னை வேளாண்மை இயக்குனர் தெட்சிணா மூர்த்தி தெரிவித்தார். நாகை வட்டாரத்தில் வேளாண் துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் சம்பா தொகுப்பு திட்ட பணிகளை சென்னை வேளாண்மை இயக்குனர் தெட்சிணாமூர்த்தி நேற்று நேரில் ஆய்வு செய்தார். பாலையூர் கிராமத்தில் விவசாயிகளின் வயல்களில் தரிசு உழவு, நேரடி நெல் விதைப்பு செய்யப்பட்ட வயல்களை பார்வையிட்டார். பின்னர் அவர் கூறுகையில்,

நாகை வட்டாரத்தில் 15,500 ஏக்கர் பரப்பில் சம்பா சாகுபடி செய்யப்படும்.

அதில் 11,200 ஏக்கர் சம்பா தொகுப்பு திட்டத்தின்கீழ் உழவு மானியம் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பாலையூர் கிராமத்தில் சாகுபடி பரப்பான 820 ஏக்கரில் 320 விவசாயிகளின் 600 ஏக்கரில் தரிசு உழவு செய்யப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு வழங்கப்படும் மானியம் வங்கிக்கணக்கில் நேரடியாக செலுத்தப்படும். சம்பா தொகுப்பு திட்டத்தில் விவசாயிகள் அனைவரும் பங்கு பெற வேண்டும். சம்பா தொகுப்பு திட்டத்தின்படி, உழவுமானியமாக ஏக்கருக்கு ரூ.500, விதை நெல் கிலோ ஒன்றுக்கு ரூ.10, சிங் சல்பேட் ஏக்கருக்கு ரூ.400, களைக்கொல்லி தெளிக்க ஏக்கருக்கு ரூ.250, விதைப்பு கருவி மூலம் விதைத்தால் ஏக்கருக்கு ரூ.600 மானியம் வழங்கப்படும் என்றார். ஆய்வின்போது மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் சேகர், துணை வேளாண். இயக்குனர்கள் விஜயகுமார், கணேசன், நாகை வட்டார வேளாண் உதவி இயக்குனர் உதயகுமார் ஆகியோர் உடனிருந்தனர்.

**விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

ராமநாதபுரம், : ராமநாதபுரம் கலெக்டர் அலுவலகத்தில் வரும் 23ம் தேதி காலை 11.30 மணிக்கு கலெக்டர் தலைமையில் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நடைபெற உள்ளது. இந்த கூட்டத்தில் விவசாயிகள் கலந்து கொண்டு தங்கள் குறைகள், புகார்களை தெரிவிக்கலாம் என கலெக்டர் நடராஜன்தெரிவித்துள்ளார்.

## கமுதி அருகே 10 ஆண்டுகளாக இயற்கை உரத்தில் சாகுபடி செய்து அசத்தும் விவசாயி

கமுதி,: கமுதி அருகே குறைந்த செலவில் இயற்கை உரம் தயாரித்து கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக விவசாயப் பணிகளை செய்து விவசாயி சாதனை படைத்து வருகிறார்.கமுதி- மதுரை சாலையில் உள்ளது நரியன் சுப்புராயபுரம் கிராமம். இங்கு அபிராமத்தைச் சேர்ந்த விவசாயி பெருமாள் தனக்குச் சொந்தமான 15 ஏக்கர் நிலத்தில் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக இயற்கையான முறையில் உரச் செடிகளை விதைத்து பின்னர் அவற்றை உரமாக்கி அதன் மூலம் நெல், பருத்தி, மிளகாய், கரும்பு உள்பட பல்வேறு பயிர்களைச் சாகுபடி செய்து

வருகிறார்.செயற்கை உரத்தால் மண்ணின் தன்மை மாறி விடுவதால் விவசாயிகள் பலரும் இயற்கை உரத்துக்கு மாற முயற்சி செய்து வருகின்றனர்.

இந்தநிலையில் அதிக விலை கொடுத்து செயற்கை உரங்கள் வாங்குவதை தவிர்த்துஇயற்கை உரத்தின் மூலம் சாகுபடி செய்து வருகிறார் விவசாயி பெருமாள்.இதன் மூலம் உரச் செலவு குறைகுகிறது, நல்ல மகசூலும் கிடைக்கிறது. இது குறித்து விவசாயி பெருமாள் கூறுகையில், “செயற்கை முறையில் தயாரிக்கப்படும் யூரியா, பொட்டாசியம் உள்ளிட்ட உரங்கள் விவசாயிகளுக்கு எளிதில் கிடைப்பதில்லை அவ்வாறு கிடைக்கும் உரங்கள் கூடுதல் விலைக்கு விற்கப்படுகிறது. இதனால், இப்பகுதியில் விவசாயத்திற்கு உரங்கள் தட்டுப்பாடாக உள்ளது. இதன் காரணமாக தனது வயலில் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக குறைந்த விலையில் இயற்கை முறையில் உரச் செடிகளை வளர்த்து அவற்றை எனது வயலில் உரமாக்கி பயிர் சாகுபடி செய்து வருகிறேன். இதனால் எனக்கு அதிக மகசூலும் கிடைத்து கூடுதல் லாபம் பெற்று பயனடைந்து வருகிறேன் என்றார்.